**முதன்மை மாவட்ட நீதிமன்றம், தூத்துக்குடி**

நாள். 19.12.2024

Case No. DOP.412/2022

P.W. 1

**திருமதி.சாந்தி**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

எதிர்மனுதாரரான எனது கணவரின் சொந்த ஊர் ஆறுமுகநேரி ஆகும். எனக்கும் அதே ஊர் தான் சொந்த ஊர் என்றால் சரிதான். நானும் எனது கணவரும் கிறிஸ்தவ சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். நாங்கள் இருவரும் ஒரே சர்ச்சை சேர்ந்த உறுப்பினர்கள் என்றால் இல்லை. நாங்கள் இருவரும் வேறு வேறு சர்ச்களில் மெம்பர் ஆக இருந்தோம். திருமணத்திற்கு முன்பாக எங்கள் இரு வீட்டாருக்கும் நல்ல பழக்கங்கள் இருந்தது என்றால் திருமண பேச்சுவார்த்தையின் போது தான் நாங்கள் பேச ஆரம்பித்தோம். திருமணத்தின் போதே எதிர்மனுதாரர் தாரகதாரா கெமிக்கல்ஸ்–ல் பணிபுரிந்து வந்தார் என்றால் சரிதான். எனது கணவர் ஐ.டி.ஐ–ல் டீசல் மெக்கானிக்கல் படித்துள்ளார். எங்கள் குடும்பத்தினர் எனது கணவரைப் பற்றி விசாரித்து தான் நல்ல வேலையில் இருந்ததால் தான் திருமண ஏற்பாடு செய்தனர் என்றால் சரிதான். எங்களது திருமணம் ஆறுமுகநேரி சர்ச்–ல் கிறிஸ்தவமுறைப்படி தான் நடந்தது என்றால் சரிதான். நான் திருமணத்திற்கு முன்பு Assembly of God – என்ற சர்ச்–ல் தான் உறுப்பினர் ஆக இருந்து, அதன் கொள்கைகளை கடைப்பிடித்து வந்தேன் என்றால் சரிதான். எங்கள் வீட்டார் தான் சி.எஸ்.ஐ–க்கு மாறி சி.எஸ்.ஐ முறைப்படி கல்யாண ஏற்பாடு செய்யப்பட்டது என்றால் சரிதான். எதிர்மனுதாரர் எனக்கு 7 பவுனில் தாலி போட்டார் என்றால் சரிதான்.

2005–ல் திருமணம் முடிந்ததிலிருந்து , 2022–ல் வழக்கு தாக்கல் செய்யப்படும் வரை நான் எதிர்மனுதாரருடன் தான் வாடகை வீட்டில் சேர்ந்து வாழ்ந்தேன் என்றால் சரிதான். நாங்கள் இருவரும் 2022–ல் வழக்கு தாக்கல் செய்யப்படும் வரை ஜெப ஊழியம் செய்தோம் என்றால் சரிதான். எனது கணவர் மது அருந்தும் பழக்கம் உடையவர் என்பது 2013–ல் தான் தெரிய வந்தது. அதன் பிறகு , அவருடைய மதுப்பழக்கத்தை நிறுத்த நான் எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அவராக

RAMANUJAM VASANTHI
Digitally signed by RAMANUJAM VASANTHI
Date: 2024.12.19 14:44:53 +0530

திருந்தி விடுவார் என்று நினைத்தேன். அவரின் மதுப்பழக்கம் தெரிந்த பிறகும் தொடர்ந்து நாங்கள் இருவரும் ஒன்றாக வசித்தோம் என்றால் சரிதான். அந்தச் சமயம் எங்கள் இருவருக்கும் கணவன் மனைவி என்ற முறையில் அடிக்கடி சண்டை பிரச்சினைகள் வரும் என்றால் சரிதான். பிரச்சினைகளுக்குப் பிறகும் இருவரும் ஒன்றாக சேர்ந்து வாழ்ந்தோம் என்றால் சரிதான். என்னை எனது கணவர் 2018–ல் குடித்து விட்டு வந்து அடித்தார் . தேதி, மாதம் நினைவில்லை. இந்தச் சங்கதியை நான் மனுவில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எனது கணவர் அடித்தது குறித்து எங்கள் வீட்டாரிடமோ உறவினரிடமோ மற்றும் நண்பர்கள் வட்டாரத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். காவல் நிலையத்தில் புகார் எதுவும் அளிக்கவில்லை என்றால் சரிதான். திருந்தி விடுவார் என்று நினைத்தேன். நான் முதன்முதலில் எனது கணவர் குடித்து விட்டு வந்து அடிப்பதாக இந்த மனுவில் தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 01.01.2022 முதல் மாதாமாதம் எனது வங்கிக் கணக்கில் ரூ.10,000 தவறாமல் செலுத்தி வருகிறார் என்றால் சரிதான். எனது தாயார் எனது தந்தையிடமிருந்து விவாகரத்து பெற்று தனியாக வாழ்ந்து வருகிறார் என்றால் சரிதான். நான் M.Com. படித்துள்ளேன். வேலை எதுவும் பார்க்கவில்லை. எனது தாயாரின் பெயரில் ஒரு வீடு உள்ளது . எனக்கு எந்த சொத்துமில்லை. அதனால் எனது திருமணத்தின் போது ரொக்கமோ நகையோ எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனக்கு எந்த வருமானமும் இல்லை என்பதால் நான் எதிர்மனுதாரருக்கு ரூ.17 லட்சம் கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் தவறு. என்னுடைய அப்பா LIC Kisan Vikaas காப்பீடு போட்டு வைத்திருந்தார். அதன் மூலமாக தொகை வந்தது. ரூ.17 லட்சத்தை எனது கணவருக்கு கொடுத்ததற்காக எந்த ஆதாரமும் இல்லை என்றால் வங்கிக் கணக்கு புத்தகம் உள்ளது. அந்தத் தொகையை வாங்குவதற்கு எதிர்மனுதாரருக்கு எந்த அவசியமும் இல்லை என்றால் சரியல்ல. திருமணத்தின் போது எனது தாயார் கொடுத்த சீர் வரிசை அனைத்தையும் 2021 கடைசியில் எனது அம்மா கையொப்பம் போட்டு பெற்றுச் சென்றுவிட்டார் என்றால் சரிதான். அதன் பிறகு தான் நான் எதிர்மனுதாரர் மீது விவாகரத்து வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. அவர் அதற்கு முன்பாக என்னை குடித்து விட்டு அடிப்பார். எனது கணவர் தற்போது என்னுடன் வாழ தயாராக உள்ளார் என்றால் எனக்கு விருப்பமில்லை. நான் எனது தாயார் மற்றும் தாய் மாமன் பேச்சைக் கேட்டு இந்த வழக்கை தாக்கல்

RAMANUJAM VASANTHI

Digitally signed by RAMANUJAM VASANTHI
Date: 2024.12.19 14:45:03 +0530

செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனவே நான் போட்டுள்ள மனு உண்மையானது அல்ல என்பதால் தள்ளுபடி செய்ய வேண்டுமென்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை –</u> இல்லை.**

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து/ கைரேகை செய்யப்பட்டது.

RAMANUJAM VASANTHI
Digitally signed by RAMANUJAM VASANTHI
Date: 2024.12.19 14:45:10 +0530

**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**தூத்துக்குடி.**